‘ஆதர்ச தேச-கட்டமைப்பு’ பற்றிய நூல் தொகுப்பு :

தேசம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் - பாகம் 3

### இந்திய பொருளாதாரத்தின் மீது தாக்குதல்

# ஹலால் பொருளாதாரம்?

(Halal Economy - தமிழ் [Tamil])

## நூலின் அட்டவணை


1. ஹலால் என்றால் என்ன? 7
2. ஹலால் இயக்கத்தின் நோக்கம் 13
   * ஹலால் இயக்கத்தின் மூலமாக உலக பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துதல் 13
3. ஹலால் கருத்தின் பரிணாமம் 13
   * 2007-லிருந்து வளர்ந்து வரும் ஹலால் விஷயம் 15
4. ஹலால் பொருளாதாரம் : அதன் இயல்பு, பிரசாரம் மற்றும் விளம்பரம் 17
5. ஹலால் செர்டிபிகேஷன் : ஹலால் பொருளாதாரத்தின் முதுகெலும்பு 35
6. ஹலால் செர்டிபிகேஷனின் பயனற்ற தன்மை 42
7. ஹலால் பொருளாதாரத்தின் தீய விளைவுகள் 49
8. ஹலால் பொருளாதாரத்திற்கும் ஜிஹாதி தீவிரவாதத்திற்கும் உள்ள தொடர்பு 52
9. ஹலால் பொருளாதாரம் சம்பந்தமாக ஹிந்துக்கள் எடுக்க வேண்டிய நிலைப்பாடு மற்றும் அதை சமாளிக்கும் விதம் 59
10. ஹலால் பொருளாதாரத்திற்கு இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள எதிர்ப்பு 68
11. ஹலால் பொருளாதாரத்தை எதிர்க்கும் ஹிந்து ஜனஜாக்ருதி ஸமிதியின் போராட்டம் மற்றும் அதன் வெற்றி 76
12. ஹலால் என்ற போர்வையில் இயங்கும் பொருளாதார ஜிஹாத்தை எதிர்த்து போராட்டம் 83

# நூலின் முன்னுரை

இன்றைய உலகில் பணம் படைத்தவரே உயர் பதவிகளை வகிக்கின்றனர். அவர்களே வருங்கால போக்கை, அதாவது அரசியல் கொள்கைகள், தேசிய உத்திகள் ஆகியவற்றை நிர்ணயம் செய்கின்றனர். இவர்களின் நிதி பலத்தால் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள் 'வளர்ச்சி அடைந்த நாடுகளாக' கருதப்பட்டு மற்ற நாடுகளின் மீது ஆதிக்கம் செலுத்தும் சக்தி படைத்தவைகளாக உள்ளன. இக்காரணத்திற்காகவே நிதி பலம் அவசியமாக உள்ளது. ஆனால் இத்தகைய நிதி பலம் உலக நாசத்தை விளைவிக்கும் ஜிஹாதிகளின் கைகளுக்கு சென்றால்? இப்பயத்திற்கு காரணம் இன்று உலகெங்கும் விரைவாக பரவி வரும் ஹலால் பொருளாதாரம். இஸ்லாமிய பாங்க், ஷரியத் விதிகளை அடிப்படையாக கொண்டிருப்பதால் பல நாடுகளில் அதன் செயல்பாடு தடை செய்யப்பட்டுள்ளது. இருந்தாலும் நுகர்வோர் உரிமைகள் மற்றும் மத அடிப்படைவாதம் ஆகிய காரணங்களால் ஹலால் பொருளாதாரம் வளர்ந்து வருகின்றது.

ஒவ்வொரு பொருளும் இஸ்லாமிய சட்டங்களுக்கு உட்பட்டிருக்க வேண்டும் அதாவது ஹலால் செர்டிபைட் ஆக இருக்க வேண்டும் என முஸ்லிம்கள் வலியுறுத்த ஆரம்பித்துள்ளனர். இதன் பலனாக மதசார்பற்ற பாரதத்தில் அரசாங்க ஸ்தாபனங்களிலும் கூட ஹலால் செர்டிபிகேஷன் அவசியமான ஒன்றாக ஆகிவிட்டது. இந்திய மக்கட்தொகையில் 15% மட்டுமே உள்ள சிறுபான்மையினர் இஸ்லாமியத்திற்கு உட்பட்ட ஹலால் மாமிசத்தை உண்ண வேண்டும் என்பதற்காக ஏனைய 85% மக்கள் மீது ஹலால் மாமிசம் பலவந்தமாக திணிக்கப்படுகிறது. இந்த ஹலால் செர்டிபிகேஷன் வெறும் மாமிசத்துடன் நிற்கவில்லை, மாறாக தின்பண்டங்கள், அழகு சாதனங்கள், மருந்துகள், ஆஸ்பத்திரிகள், வியாபார வளாகங்கள், கூட்டுறவு சங்கங்கள், சுற்றுலா ஆகியவற்றிற்கும் வாங்கப்படுகின்றது.

இஸ்லாமிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஹலால் செர்டிபிகேஷன் வாங்குவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இன்று மெக்டோனால்ட் போன்ற அன்னிய பன்னாட்டு நிறுவனங்கள் 100% ஹலால் செர்டிபைட் பொருட்களை ஹிந்துக்களின் மீது திணிக்கின்றன. அதன் மூலம் ஹிந்து நுகர்வோரின் உணர்வுகளும் அவமதிக்கப்படுகின்றன. இந்த ஹலால் பொருளாதாரம் தினந்தோறும் அபரிமிதமாக வளர்வதால் இன்று 2 ட்ரில்லியன் அமெரிக்க

டாலர்களை குறுகிய காலத்திற்குள் கடந்துவிட்டது.

இன்று, முழு உலகமும் ஹலால் பொருளாதாரத்தை வெளிப்-படையாக எதிர்த்து வருகிறது. ஹலால் பொருளாதாரத்தால் மத அடிப்படைவாதம் அதிகரித்து வருகிறது என்று ஆஸ்திரேலிய பாராளுமன்றம் குற்றம் சாட்டி அதை தடை செய்துள்ளது. பொருளாதாரத்திற்கு ஒரு மதம் அடிப்படையாகும்போது அது அந்த தேசத்தின் பல்வேறு அமைப்புகளை வெகுவாக பாதிக்கிறது. ஷரியத் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பொருளாதாரத்தை அமைப்பதால், ஹலால் இந்தியாவின் மதசார்பற்ற தன்மையை நிச்சயமாக பாதிக்கிறது. அதனால் அது, உள்ளூர் வியாபாரிகள், பாரம்பரிய வணிக சமூகம், தொழிற்சாலைகள் இறுதியில் தேசத்தையே எவ்வாறு பாதிக்கிறது என்பதைப் பற்றி ஆராய்வது அவசியமாகிறது. இந்தியா எச்சரிக்கை மணியை ஒலிக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. ஹலால் செர்டிபிகேட் வழங்கும் ஸ்தாபனங்களின் வருவாய் பற்றி இந்திய அரசு தீவிர விசாரணை நடத்த வேண்டும். இந்திய அரசின் ‘இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர ஆணையம்’ (FSSAI) இருக்கும்போது தனியார் துறை ஸ்தாபனங்கள் ஹலால் செர்டிபிகேட் வழங்க வேண்டியதன் அவசியம் என்ன?

இந்தப் பின்னணியில் இந்நூலைத் தொகுத்து வழங்குவதன் நோக்கம் ஒரு குறிப்பிட்ட மதத்தினரின் உணர்வுகளை, உரிமைகளை புண்படுத்துவதோ அல்லது கேள்வி கேட்பதோ இல்லவே இல்லை! பெரும்பான்மையினரின் (100 கோடி ஹிந்துக்களின்) உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும், அவர்களின் உரிமை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் மற்றும் நம் தேசத்தை எதிர்கொள்ளும் பெரிய ஆபத்தைப் பற்றி எச்சரிக்கை செய்ய வேண்டும் என்பதே இந்நூலைத் தொகுத்ததன் நோக்கம். ‘இந்நூலைப் படித்து ஹிந்து நுகர்வோர் விழிப்படைய வேண்டும்’ என்பதே பகவான் ஸ்ரீகிருஷ்ணனின் சரணங்களில் செய்யப்படும் பிரார்த்தனை!’ – **தொகுத்தவர்**